உ

பராசத்திதுணை.

# வீராமபட்டணம்

# மாரியம்மன்பேரில் விருத்தம்.

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதராஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதராஸ் என். சி.

1914.

# விளம்பரம்.

## சாதகாலங்காரம்.

### மூலமும் - உரையும்.

இச் சென்னையின்கண் முன்னோர்கள் அருளிச்செய்த பல சோதிட நூல்கள் உள்ளன. அவற்றுள் இரண்டொரு நூற்களே மிக்க பயன்படத்தக்கவைகளும், வரிசைக்கிரமமாகச் செய்யப்பட்டவையுமாகும். அப்படிப்பட்டவற்றுள் சாதகாலங்காரம் என்பதுஎன்று அதற்கு இதுவரைக்கும் உரையில்லாத பெருங்குறையை நோக்கிப் பலரும் என்னை வற்புறுத்தியபடியால் அதற்குத் தக்கவாறு உரையெழுதி பன்னிரண்டு பாகங்களும் நன்ருய் விளங்கும்படி விளக்கி அச்சிட்டிருக்கின்றோம். வேண்டியவர்கள் எம்மிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

இதன் விலை ரூபா 1 8 0

பராசத்திதுணை.

## வீ ர ா ம ப ட் ட ண ம்

# மாரியம்மன்பேரில்விருத்தம்.

சுந்தரிநிரந்தரி திகம்பரிபரம்பரி சுமங்கலி திரிசூலி நீலி, சோதிமகமாயிகரு ணாகரிபுராதனி துரந்தரிகரக பாலி, மந்திரசடாதரி மயேஸ்வரி சர்வேஸ்வரி வராகிநவ கோணிவாணி, மாதங்கிஓங்காரி ஆங்காரிசிங்காரி வல்லி திரிபுரபயிரவி, சந்திரசேகரிகுமரி தாண்டவாடம்பரி சங்கரிநித்திய கல்லியாணி, சாம்பவிமுக்கண்ணி லோக ரட்சாகரி தயாநிதி ஆனந்தரூபி, சிந்தைமனமகிழவே வீராமபட்டணத்தில் திரைகடலிலோரம்வாழும், செங் கண்மால்தங்கையே எங்கள்குல தெய்வமே செங்கழணி மாரிவுமையே. (௧)

தாயானசெல்விநீ சர்வலட்சுமியுநீ சரஸ்வதிமனோ ன்மணியும்நீ, சாதிபேதகமாக வந்தவளுநீதையல்நாயகி உண்ணாமுலையும்நீ, காயாமல்வளர்கின்ற கஞ்சிகாமாட்சி நீ கமலாட்சிவிசாலாட்சிநீ கண்கண்டதெய்வம்நீ சிவகா மிஅன்னைநீ கனமதுரை மீனாட்சிநீ, மாயாவினோதிநீ ரே ணுகாதேவிநீ மாதுளா னம்பிகையும்நீ, வடிவுடையமங்

கைநீ அகிலாண்டதேவிநீ வளர்கின்றபுட்களாயிநீ, தே யாமல்வளர்கின்ற வீராமபட்டணத்தில் திரைகடலிலோ ரம்வாழும், செங்கண்மால் தங்கையே எங்கள்குலதெய் வமே செங்கழுணிமாரிவுமையே. (உ)

எக்காலதேவிநீ எல்லம்மைகாளிநீ யிடர்தீர்த்தபெ ரியம்மைநீ, எதிரியரவந்தவர்கள் குலைகாலநீ சின்னம்மை கொத்தம்மைநீ, யிக்கணமறுத்தநீ படவீடமர்தநீ வீரவீ ரேஸ்வரியும்நீ, வினைதீர்க்கவந்தநீ கன்னனூர்குடிகொ ண்டு வேம்பினில்வந்தவளுநீ, அக்கினிசுரூபிநீ சமைய புரத்தாளும்நீ அழகுபாளையத்தாளுநீ, ஆதிசிவ சததிநீ விபூதிருத்திராட்சிநீ ஆடம்பரிமோகாம்பரியுநீ, திக்கெல் லாம்புகழ்பெற்ற வீராமபட்டணததில் திரைகடலிலோ ரம்வாழும், செங்கண்மால் தங்கையே எங்கள்குலதெய்வ மே செ கழுணி மாரிவுமையே. (ங)

நித்தமும் உநதனிட பாதாரவிந்தத்தை நிசமதாய் நம்பினோர்க்கு, நெடுநாளுமகலாத பிணிதீர்த்துநிலைதந்து நித்தியமங்களமுதவுவாய், பத்தியாயுனைநம்பு மடியாரை குடியாக்கி பாததெரிசனை யருளுவாய், பரியாசமாகவே நிந்திசெய்மூடரை பதுமைபோலாட்டிவைத்து, செத்தி டும்பிரேதமாய் நித்தியமுழுமூடராய் இகிரிப்பிடுங்கிலை

ப்பாய், செம்பவழவல்லியே உந்தனிடமகிமையை செப்புதற்கெளிதாகுமோ, சித்தியாமனமகிழ வீராம்பட்டணத்தில் திரைகடலி லோரம்வாழும், செங்கண்மால்தங்கையே எங்கள்குலதெய்வமே செங்கழனிமாரிவுமையே.

தில்லுமுல் லுகள்செய்து வல்லமைகள் பேசியே திகைக்கவே செய்தபேர்க்கு, திருசூலம்விட்டு அவருடலும்பிளந்திட திருக்கோணமாக்கிவைத்து, செல்லுகளெரித்திட கண்குருடுசெவிடுமே செலவாதை குணமேகமும், சேழ்ப்பமொடுபித்தமும் ஞக்கினில்விராச்சியும் சித்தமுமயங்கவைப்பாய், அல்லுமேபகலும்உன் பாதம் நம்பினபேர்க்கு அதிகபாக்கியமருளுவாய், அருதி அபிராமி அரவாபரணி திருகோணி அழகுள்ளநீலவேணி, சொல்லுமொழி பிசகாதவீராம்பட்டணத்தில் திரைகடலீலோரம்வாழும், செங்கண்மால்தங்கையே எங்கள்குல தெய்வமே செங்கழனிமாரிவுமையே. (ரு)

வஞ்சனைகள்பில்லி சூனியமொடு பேய்களும் வடுகனெடு காட்டேரியும், வடிவமோகினிகளும் பீடியொத்த வீரனும் வதைக்கின்றபூதகணமும், அஞ்சாமல்வந்திடும் கூளியுந்துளியும் ஆடிவரும் லாடமுனியும், அருபியாய் வந்திடும்பிரம்மசாமுண்டியும் அசைவத்தசாகினிகளும்,

மிஞ்சிவரவொட்டாமல் காத்துஇரட்சித்திடும் வித்தகி முத்தாலம்மையே, மெய்யானதெய்வமே பரசுராமனைப் பெற்ற வேதஞரணிகாரணி, செஞ்சொல்கள் மறவாத வீராம்பட்டணத்தில் இரைகடலி லோரம்வாழும், செங் கண்மால்தங்கையே எங்கள்குல தெய்வமே செங்கழணி மாரிவுமையே. (சு)

சென்மங்கள் உலகத்தில் யெடுத்தநாள் முதற்கொ ண்டு சித்தத்தில் கவலைகொண்டு, செய்யாத பூசையும் தானதர்மங்களும் செய்யகுரு கடாக்ஷம்வைத்து, கர்மங் கள்தோஷங்கள் நீக்கியேபுத்திரரைக் கருணையாய் தந்து மென்ன, கௌமாரி ஆயிகுரு உந்தன்முத் திரைதந்து கரையேறிஞல் நம்பலாம், உன்மகிமை யறியாமல் உலக த்திலுள்ளபேர் உழன்றுதிரிவார்களம்மா, ஊத்துக்காட் டமர்ந்த துலுக்காணநாயகி உன்னையே நம்பினேனம்மா, சென்மவினை தீர்த்தருளும் வீராம்பட்டணத்தில் திரை கடலி லோரம்வாழும், செங்கண்மால்தங்கையே எங்கள் குலதெய்வமே செங்கழணி மாரிவுமையே. (எ)

வேடிக்கையாகவே உன்மகிமைசொல்லியே வேப் பிலைக்கரகமேந்தி, விளையாடினோர்களை அலையாமல் காத் திடும் மெய்யான அங்கமுத்தே, தேடியே யான்வுன்னைத்

தோத்திரஞ்செய்யவும் தெரிசனந் தந்தருளுவாய், செம தக்கினிரிஷியுடன் விளையாடிவளர்கின்ற சிவானந்தி ரா ஜேஸ்வரி, வாடியேதிரியாமல் மங்களசுகந்தந்து மனதில் நினைந்தபடியே, மகாதேவிகாற்பத்து முக்கோணநாயகி மறவாமல் வரமருளுவாய், தேடியேதுதிசெய்யும் வீரா ம்பட்டணத்தில் திரைகடலில் ஓரம்வாழும், செங்கண் மால்தங்கையே எங்கள்குல தெய்வமே செங்கழனிமாரி உமையே. (அ)

சிரசில்மணிநாகமும் சிங்காரரூபமும் திலர்தநெத்தி ப்பட்டமும், தீபமுந்தூபமும் அபிஷேகதீர்த்தமும் செ ங்கழனி புஷ்க்கருணையும், பரவுசென்னட்டமும் தொட் டிலும்பிள்ளையும்பம்பைநாகசுரமேளமும்,பண்பானபொ ங்கலும் சேவல்காவுகளுடன் பக்தர்கள்கொண்டாடவும், கரகமுந்தேரும் கனத்தவைபோகமும் காவலர்கள்போற் றிசெய்யவும், கண்காணவருகின்ற பேசும்மகமாரியே காத் தவணையின்றதாயே, திரைகடலிலோரம்வாழ் வீராம்பட் டணத்தில் செழிக்கவேவீற்றிருக்கும், செங்கண்மால் தங்கையே எங்கள்குல தெய்வமே செங்கழனி மாரி உமையே. (கூ)

எங்கெங்கு முப்போகம் விளையவும் அகவிலைகள் ஏரவும் பயிர்தழையவும், மிக்கட்டுமிடைகூறு வாராமல் காக்கவும் மெங்குமங் களமாகவும், திங்களுமும்மாரி பொழியவு மழியாமல் சீவராசிகள் வாழவும், சிவசமயம் குருசமயம் மறுசமயம்வாழ்கவும் தெய்வசபையும்வாழ், பங்கமது வாராமல் எங்கள்மனை வாழ்கவும் பதியிலுள் ளோர்வாழ்கவும், பாடினோர்படித்தோர் கேட்டிருந்தோர்களும் பதியினிலிருந்துவாழ்க, சிங்காரமாரியும் பரசுராமனுங்காத்த சின்னணும்போத்தன்வாழி, திரைகடலிலோரம்வாழ் விறும்பட்டணத்தில் செங்கழனி மாரி வுமையே. (ய)

மாரியம்மன்பேரில் விருத்தம்

முற்றிற்று.